## உங்களுக்கு உள்ள கடமை...



## நம்பிக்கையுடன் நடந்துகொள்ளல்

- காப்புறுதிப் பூட்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னரும் பின்னரும் உள்ள அனைத்து சந்தர்ப்பங்களிலும் நம்பிக்கையுடன் நடந்துகொள்ளல் உங்கள் கடமையாகும்.
- நீங்கள் உங்கள் காப்புறுதிக் கம்பனிக்கு உங்கள் முன்மொழிவுப் படிவத்தை பூர்த்திசெய்யும் பொழுது அதில் உள்ள தகவல்களை உண்மையானவும் செம்மையாகவும் வழங்குவதில் நேர்மையாக இருத்தல் வேண்டும்.
- உங்கள் காப்புறுதிப் பூட்கையின் கீழ் கோரிக்கைகளை முன்வைக்கும் பொழுது வழங்கும் தகவல்கள் தொடர்பாகவும் நேர்மையாக இருத்தல் வேண்டும்.
- விசேடமாக உங்கள் உடல்நலம் தொடர்பாக நீங்கள் உண்மையானதும் செம்மையானதுமான தகவல்களை வழங்குவதற்கு தவறின், அது உங்கள் கோரிக்கையில் மட்டும் பாதிப்பினை ஏற்படுத்தாது, அது நீங்கள் செலுத்திய அனைத்துக் கட்டணங்களையும் மீளச் செலுத்தாது உங்கள் காப்புறுதிப் பூட்கையை இரத்துசெய்வதற்கும் வழிவகுக்கும்.

## காப்புறுதிப் பூட்கையைப் பராமரித்தல்

- காப்புறுதிக் கம்பனியில் இருந்து அறிவித்தல் வரும்வரை காத்திராமல், உங்கள் தவணைக் கட்டணத்தை உரிய நேரத்தில் அல்லது கருணைக் காலம் வழங்கப்பட்ட காலத்தினுள் செலுத்துதல் மற்றும் காப்புறுதிக் கம்பனியினால் உங்கள் தவணைக் கட்டணம் பெற்றுக்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்தல் என்பன உங்கள் கடமையாகும்.
- தவணைக் கட்டணம் செலுத்தப்படாமை அல்லது கொடுப்பனவில் தாமதம் என்பன பூட்கையில் இடைவெளி விழுவதற்கு காரணமாகலாம் என்பதுடன், கம்பனி இந்தக் காப்புறுதி தொடர்வதை மற்றும் நன்மைகளை வழங்குவதை நிறுத்துவதற்கு தீர்மானிக்கலாம்.
- காப்புறுதிக் கம்பனியில் இருந்து ஏதேனும் அறிவித்தல்களை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்வதற்கு, தொடர்பாடல் விபரங்களில் யாதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக காப்புறுதிக் கம்பனிக்கு அறிவித்தல் வேண்டும்.

## காப்புறுதிப் பூட்கை ஆவணத்தை விளங்கிக்கொள்ளல்

- உங்களுக்கு பூட்கை ஆவணம் கிடைக்கப்பெற்றதும் அதில் நீங்கள் எதிர்பார்க்கும் காப்புறுதிப் பூட்கை (இடர்கள் உள்ளக்கப்பட்டுள்ளது, நன்மைகள் வழங்கப்பட்டுள்ளது, தவணைக் கட்டணம் செலுத்தத்தக்கது, நியதிகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடங்களாக) உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு உடனடியாக அதனை வாசிப்பது உங்கள் கடமையாகும்.
- உங்களுக்கு யாதேனும் சந்தேகங்கள் இருந்தால் உடனடியாக காப்புறுதிக் கம்பனியை தொடர்புகொள்ளுதல் வேண்டும்.

## கோரிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைத்தல்

- பூட்கை காப்பீட்டு நிபந்தனைக்கு அமைவாக, நீங்கள் கோரிக்கை அறிவித்தல், அவசியமான ஆவணங்கள் மற்றும் ஏனைய தகவல்களை உரிய காலத்தினுள் வழங்குதல் வேண்டும்.
- கோரிக்கை தொடர்பாக நடவடிக்கைகளை விரிவுபடுத்தவதற்கு உங்கள் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது.
- நீங்கள் காப்புறுதி கம்பனிக்கு அறிவிக்கத் தவறின், கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைக்காவிட்டால் அல்லது உரிய காலத்தினுள் கோரப்பட்ட ஆவணங்களையும் தகவல்களையும் சமர்ப்பிக்கத் தவறின், உங்கள் கோரிக்கை தாமதமாகலாம் அல்லது நிராகரிக்கப்படலாம்.

IBSL
INSURANCE BOARD OF SRI LANKA

# ஒரு காப்புறுதிப் பூட்கை உரிமையாளராக உங்கள் உரிமைகள் மற்றும் கடமைகளைத் தெரிந்துகொள்ளுங்கள்



## உங்களுக்கு உள்ள உரிமைகள்...



## அறிவித்தல

- நீங்கள், ஒரு காப்புறுதிக் கம்பனியில் இருந்து ஒரு காப்புறுதிப் பூட்கையை பெற்றுக்கொள்வதற்கு முன்னரும் பின்னரும் உங்கள் காப்புறுதி தொடர்பான சகல விடயங்களையும் காப்புறுதிக் கம்பனி உங்களுக்கு அறிவிப்பதற்கான உரிமையை கொண்டுள்ளீர்கள்.
- உங்கள் காப்புறுதி தொடர்பாக யாதேனும் தெளிவில்லாத அல்லது கடினமான விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தெளிவுபடுத்தலை உங்கள் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.
- உங்கள் கோரிக்கையின் நிலை மற்றும் உங்கள் கோரிக்கை நிராகரித்தல் தொடாபாக அதன் தீர்மானம் உட்பட உங்கள் கொள்கை தொடர்பாக சகல விடயங்களையும் தெளிவாக அறிவிப்பதற்கான கடமை காப்புறுதிக் கம்பனிக்கு உள்ளது

## நம்பிக்கையுடன் நடத்துதல்

- உங்கள் காப்புறுதிக் கம்பனியால், நீங்கள் எவ்வேளைகளிலும் நல்ல நம்பிக்கையுடன் நடத்தப்படுவதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.
- காப்புறுதிப் பண்டங்களின் (வகைகள்) சந்தைப்படுத்தல் அல்லது சேவையின் மூலம் காப்புறுதிக் கம்பனி உங்களைத் தவறாக வழிநடத்தக் கூடாது.
- உங்கள் காப்புறுதி பூட்கை தொடார்பான அனைத்து பரிமாற்றங்களின் போதும் உண்மையாக, நியாயமாக மற்றும் வெளிப்படையாக நடத்தல் வேண்டும்.

## நீங்கள் கொடுத்ததற்கு அமைவாக பெற்றுக்கொள்ளல்கள் அமைதல் வேண்டும்

- உங்களுக்கு பொருத்தமான அனைத்து தேவைகளையும் பெற்றுக்கொள்ளும் வகையில் காப்புறுதிப் பூட்கையைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.
- காப்புறுதி பூட்கையில் குறிப்பிட்டவாறு, நீங்கள் அதில் வழங்கப்படும் நன்மைகள் அல்லது நிபந்தனைகள் பற்றி திருப்தியடையவில்லை எனில், குறிப்பிட்ட காலப்பகுதியினுள் அதனை இரத்துச் செய்வதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.
- உங்கள் காப்புறுதி பூட்கைக்கான முன்மொழிவை சமர்ப்பிப்பதற்கு முன்னர், ஒப்பந்தத்தை விளங்கிக்கொண்டு அதில் நுழைவதற்கு, மாதிரி பூட்கை ஆவணத்தை கோருவதற்கும் வாசிப்பதற்கும் உங்களுக்கு உரிமை உள்ளது.

## நிவர்த்தி செய்தல்

- உங்கள் காப்புறுதிக் கம்பனியின் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறையின் ஊடாக உங்கள் காப்புறுதிப் பூட்கை தொடர்பான (காப்புறுதிக் கோரிகை கையாளப்பட்ட முறை மற்றும் வழங்கப்பட்ட கோரிக்கை உள்ளடங்களாக) யாதேனும் முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது.
- உங்கள் காப்புறுதிக் கம்பனிக்கு, உங்கள் முறைப்பாடு தொடர்பாக நியாயமாக வினைத்திறனுடன் மற்றும் விரைவாக கையாளுவதற்கான கடமை உள்ளது.
- உங்கள் காப்புறுதிக் கம்பனியினால் வழங்கப்பட்ட தீர்வு தொடர்பாக நீங்கள் திருப்தி அடையாவிடில், அது தொடர்பாக இலங்கை காப்புறுதிச் சபைக்கு அறிவிப்பதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.

**நினைவுபடுத்தல்:** உங்கள் உரிமைகளை அறிந்துகொள்ளல் மற்றும் உங்கள் கடமைகளைப் பூர்த்திசெய்தல் என்பன உங்கள் மனதுக்கு நிம்மதியைக் கொடுப்பதுடன், திருப்திகரமான காப்புறுதிப் பூட்கை காப்பீட்டையும் உறுதிப்படுத்தும்.


சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்பாடல் பகுதி

**இலங்கை காப்புறுதி சபை**

11வது மாடி, கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக மையம்
கொழும்பு 01.
தொலைபேசி: 011 2396184-9
பக்ஸ்: 011 2396190
மின்னஞ்சல் முகவரி : info@ibsl.gov.lk
இணையத்தளம் : www.ibsl.gov.lk


இலங்கை காப்புறுதிச் சபை, காப்புறுதிக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கான ஓர் அமைப்பாகும். காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களின் ஈடுபாடுகளை பாதுகாத்தல் இலங்கை காப்புறுதிச் சபையின் நோக்கமாகும்.